# பலாலியிலிருந்து 10,000 படையினர் குறைப்பு

## தாக்குதல் திட்டத்தில் தளர்வு

(கொழும்பு)

பலாலி இராணுவ தளத்தில் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த இராணுவத்தினரின் எண்ணிக்கை பத்தாயிரத்தால் குறைக்கப்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ் குடா மீது பாரிய தாக்குதலை தொடுப்பதற்காக பலாலி தளத்தில கடந்த வாரம் வரை நிலைகொண்டிருந்த 45,000 படையினரின் எண்ணிக்கை உடனடியாக 35,000 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் வந்த அன்ரனோவ் விமானம் கடலில் வீழ்ந்ததை அடுத்து விடுதலைப் புலிகளுக்கு எதிராக படையினர் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த பாரிய தாக்குதல் நடவடிக்கையில் பெரும் தளர் (6-ம் பக்கம் பார்க்க)


விலை ரூபா 6-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 புரட்டாதி 4 இதழ் 229
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 21 09 1995


## புன்னாலைக்கட்டுவனில் 4 சிப்பாய்கள் காயம்

(கொழும்பு)

புன்னாலைக்கட்டுவன் இராணுவ காவலரண்மீது விடுதலைப் புலிகள் மோட்டார் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டதாக பாதுகாப்பு நடவடிக்கைகள் ஒருங்கிணைப்பு செயலகம் நேற்று தெரிவித்தது.

விடுதலைப் புலிகளின் இத்தாக்குதலில் படையினர் தரப்பில் நால்வர் படுகாயங்களுக்குள்ளானதாக படையினர் தெரிவித்துள்ளனர்.

நீண்ட நேரமாக விடுதலைப் புலிகள் இத்தாக்குதலை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. — கசி

# ★ பாரிய படை முகாம் மீது மட்டக்களப்பில் புலிகள் அதிரடி

# அதிகாரி உட்பட 8 ராணுவம் பலி

## பெருமளவு ஆயுதங்களும் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களபபு மங்கள ஓயா புளியடி இராணுவ முகாம் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிவேக உக்கிர தாக்குதலில் ஒரு அதிகாரி உட்பட எட்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 9 பேர் படுகாயமடைந்தனர். ஆயுதங்கள் பலவும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

நேற்று அதிகாலை 2-35 மணியளவில் விடுதலைப்புலிகள் இவ் இராணுவ முகாம் மீது பாரிய தாக்குதலைத் தொடுத்தனர். 15 நிமிட நேரமாக இடைவிடாது இடம் பெற்ற விடுதலைப் புலிகளின் தாக்குதலையடுத்து முகாம் முற்று முழுதாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டு எரித்து அழிக்கப்பட்டது. (6ம் பக்கம் பார்க்க)

## குடாநாடு எங்கும் தியாகி திலீபனுக்கு அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

தியாகி லெப். கேணல் திலீபனின் எட்டாம் ஆண்டு நினைவு நாளின் ஆறுவது நாளாக நேற்று குடாநாடு பூராவும் மிகவும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்றைய நிகழ்வுகளில் குடாநாட்டின் பல்வேறு பொது அமைப்புகளைச்சேர்ந்த பெருமளவு தொண்டர்கள் உட்பட பாடசாலை மாணவர்கள் பொதுமக்களும் கலந்து (6ம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்குதலை நிறுத்துக சந்திரிகாவிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இராணுவத்தினரால் அண்மைக் காலங்களில் மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்களுக்கு இலக்காகி மரணமானவர்கள் மற்றும் படுகாயமடைந்தவர்கள் பற்றிய விபரங்களை யாழ் (6ம் பக்கம் பார்க்க)

## பலாலி ஷெல் உரும்பராயில் வீழ்ந்து இருவர் உடல் சிதறிப் பலியாகினர்

### கர்ப்பிணி உட்பட 7 பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் நேற்று அதிகாலை 1-30 மணியளவில் உருப்பராய் பகுதியை நோக்கி மேற்கொண்ட அகோர ஷெல் தாக்குதலில், உரும்பராய் வடக்கு மக்கள் குடியிருப்பு பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினுல் ஆழ்ந்த நித்திரையிலிருந்த அப்பாவிப் பொதுமக்கள் இருவர் உடல் சிதறிப் பலியானதோடு கர்ப்பிணிப்பெண் உட்பட 7 பேர் படுகாயமடைந்தனர்.

நேற்று அதிகாலை 1 30 மணியளவில் இராணுவத்தினர் மேற்கொண்ட ஷெல்களில் ஒன்று உரும்பராய் வடக்கு கற்பக விநாயகர் ஆலய (5ம் பக்கம் பார்க்க)

## பஜிரோ தகர்ப்பு இரு சிப்பாய்கள் காயம்

(புத்தளம்)

புத்தளம் மாவட்டம் அறுப்புக்காடு இராணுவ முகாமிலிருந்து பஜ்ரோ வாகனத்தில் வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கடந்த 18ம் திகதி காலை மேற்கொண்ட தாக்குதலில் இராணுவத்தினர் இருவர் படுகாயமடை (5ம் பக்கம் பார்க்க)

## இரகசியங்களை வெளியிட வேண்டாம்

### அமைச்சர்களுக்கு சந்திரிகா எச்சரிக்கை

(கொழும்பு)

அமைச்சரவை இரகசியங்களை பத்திரிகைகளுக்கு வெளிவிடும் அமைச்சர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென ஜனாதிபதி சந்திரிகா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்தின் போது, பொ. ஐ. மு வின் ஓராண்டு ஆட்சியில் ஏற்பட்ட குறைகளும், பொலிசாரின் அடக்கு முறைகள் குறித்தும் ஜனாதிபதி சந்திரிகா எழுப்பிய விவாதங்கள் அம்பலமாகி (6ம் பக்கம் பார்க்க)

## விசேட அதிரடிப் படை அதிகாரிகள் இருவர் படுகாயம்

(மட்டுநகர்)

அம்பாறை சேனைக்குடியிருப்பில் விசேட அதிரடிப் படையினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் இரு பொலிஸ் அதிகாரிகள் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இத் தாக்குதல் இடம்பெற்றது. இச் சம்பவத்தை அடுத்து இப் பகுதியில் பொலிசார் தேடுதல் வேட்டை நடாத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மட்டு ஏறாவூர் பகுதியில் லொறியில் வந்த (6ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பெயரால் 'ஜெ'க்கு தொலைபேசி மூலம் கொலை மிரட்டல்

[சென்னை]

தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு விடுதலைப் புலிகளின் பெயரால் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முதல்வர் ஜெயலலிதாவுக்கு எதிரான ஊழல் வழக்கு விசாரணை நடைபெற விருந்த சைதாப்பேட்டை நீதிமன்றுக்கு நேற்று முன்தினம் மர்மத் தொலைபேசி அழைப்பொன்று வந்தது. அதில் பேசிய நபர் 'தான் விடுதலைப் புலி உறுப்பி (6ம் பக்கம் பார்க்க)

## தெற்கே ரயில் சேவை முற்றாக ஸ்தம்பிதம்

(கொழும்பு)

புகையிரதசேவைகள் யாவும் நேற்று காலை முதல் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளதாக புகையிரதப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

புகையிரத இயந்திர சாரதிகளும், புகையிரத நிலையங்களில் கடமையாற்றும் தொழிலாளர்களும் இதுவரையில் வேலைக்குத் திரும்பாததையடுத்து இந் (5ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வெளிவந்துவிட்டது

க.பொ.த (உ/த) G C E. (A/L) புதிய பாடத் திட்டத்திற்கு அமைய சங்க காலம் தொடக்கம் இக்காலம் வரையும் "செய்யுட் கோவை". ஆக்கம்: பண்டிதர் சு. வேலுப்பிள்ளை (சு வே) கிடைக்குமிடம் ஸ்ரீ சுப்பிரமணியம் பொத்தகசாலை, 235, காங்கேசன் துறை சாலை, யாழ்ப்பாணம். (எ-5314)

### ரி.வி, றேடியோ உதிரிப்பாகங்கள்

சகலவிதமான T. V., Radio அவற்றின் I C, அவற்றின் உதிரிப்பாகங்கள், அன்ரனா, பூஸ்ரர் மற்றும் உதிரிப் பாகங்கள், பலவித கல்குலேற்றர், மற்றறிகள். வீடியோ, ஓடியோ கசற் வகைகளையும் நிதான விலையில் பெற்றுக் கொள்ளலாம். அன்ரனா பொருத்திக் கொடுக்கப்படும். புதிய நகர பல்பொருள் வணிக நிலையம் (நியூ சிற்றி றேடர்ஸ்) 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (ஏ-5245)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

வருடாந்த வெளிவாரிப் பரீட்சைகள் - 1994

மேற்படி பரீட்சைகள் ஆரம்பமாகும் திகதிகள்:

முதற் கலை / முதல் வர்த்தகம் 15-11-95.

பொதுக் கலை / சிறப்புக் கலை / வர்த்தகமானி பகுதி 1 05-12-95

பொதுக் கலை / சிறப்புக் கலை / வர்த்தகமானி பகுதி 2 08-01-96

சிறப்புக் கலை / வர்த்தகமானி பகுதி 3 22-01-96

பரீட்சை நேரசூசிகைகள் பற்றிய விபரம் வெளிவாரிப் பதிவுகள், பரீட்சைகள் அலகின் அறிவித்தல் பலகையில் 22-11-95 முதல் பார்வைக்கு வைக்கப்படும்.

அனுமதி அட்டைகள் 01-11-95 முதல் வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவு அலுவலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்

(எ 5321)


## தொலைக் கல்வி செயன்முறைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தொலைக்கல்வி 91-93 ஆண்டுக்குரிய வர்த்தக மனையியல் செயல்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 23, 24ம் திகதிகளிலும் 91-93 ஆரம்பக் கல்வி ஆசிரியர்களின் அழகியலும் ஆக்கமும் செயல்முறைப் பரீட்சையும் 93-95 92 94 பயிற்சி ஆசிரியர்களின செயல் முறைப் பரீட்சையும் இம்மாதம் 30ம் திகதியும், அடுத்த மாதம் 1ம் திகதியும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் காலை 8-30 பி ப. 4-30 வரை நடைபெறும் என சிரேஷ்ட போதனாசிரியர் அறிவித்துள்ளார். -ரி

# இராணுவ நடவடிக்கை பாதிப்பு: 3200 விண்ணப்பதாரிகளுக்கு நஷ்டஈடு வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில்கடந்த காலங்களில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்டு மரணமான 3200 பேருக்கான இறப்பு நஷ்டஈட்டுத் தொகை இது வரை வழங்கப்படவில்லையென யாழ் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புப்பகுதி உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் கூறுகையில்: "இவர்களுக்கு நஷ்ட ஈட்டுத்தொகை வழங்குவதற்குப் போதிய பணம் கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்படாமை காரணமாகவே இவர்களுக்கான நஷ்டஈட்டுத்தொகை வழங்க முடியாதுள்ளது.

இவ் விண்ணப்பதாரிகளுக்கு வழங்குவதற்கென அண்மையில் கொழும்பிலிருந்து ஏழு மில்லியன் ரூபா அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இத்தொகையைக்கொண்டு சகல விண்ணப்பதாரிகளுக்கும் நஷ்டஈடு வழங்க முடியாதிருப்பதால் இத்தொகை முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படவுள்ளது. இதன்படி கணவன்மாரை இழந்து வருமானம் எதுவும் இன்றி வாழ்க்கையை நடத்துவதற்கு மிகவும் கஷ்ட நிலையில் இருக்கும் விதவைப் பெண்களுக்கும், பெற்றோரை இழந்த பிள்ளைகள் ஆகியோருக்குமே முன்னுரிமை அடிப்படையில் இத்தொகையிலிருந்து வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார் 162-ரி


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

ஆங்கிலமொழிகற்பித்தலில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் மீள் பரீட்சை / ஆங்கில மொழி கற்பித்தலில் தகைமைச் சான்றிதழ் மீள் பரீட்சை - 1995

மேற்படி பரீட்சைக்கு 1994ம் ஆண்டுப் பரீட்சையில் சித்தியெய்தாத மீள் பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை பரீட்சைக் கிளையில் பெற்று உரிய கட்டணத்துடன் ஒக்டோபர் மாதம் 28ம் திகதிக்கு முன்னதாகச் சமர்ப்பிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

பதிவாளர்

(எ 5320)


## எயிட்ஸ் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

எயிட்ஸ் பற்றிய கருத்தரங்கு ஒன்று யாழ் மாநகராட்சி மன்ற சுகாதாரப்பகுதியினரால் எதிர்வரும் 24ந் திகதி ஞாயிற்றுக்கிழமை நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடாத்தப்படவுள்ளது.

மாநகராட்சி மன்ற ஆணையாளர் வே பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் எயிட்ஸ் நோயினால் ஏற்படக்கூடிய அபாயம் பற்றியும், இந்நோய் ஏற்படாது தடுக்கப்படவேண்டிய நடைமுறைகள் பற்றியும் கருத்துரைகள் வழங்கப்படும். 162-ரி

## லாம்புகள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கையின் போது இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு யாழ்ப்பாணம் வந்திருக்கும் யுனிசெவ் நிறுவன பிரதிநிதி லாம்புகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

சுமார் 1600 லாம்புகளை அவர் இடம் பெயர்ந்த மக்களுக்கென ஹபரண கப்பலில் எடுத்து வந்துள்ளார். 170-ரி


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## பொருளியற் கல்லூரி

110/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

( மக்கள் வங்கிக்கு அருகாமை )

**A/L 96 DAY CLASS**

(பாடசாலை செல்லாத மாணவர்கட்கு)

முழுப் பாடத்திட்ட வகுப்பு

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | வரதராஜன் |
| கணக்கியல் | — | மகளந்தி |
| வர்த்தகம் | — | வரதன் — சிவா |
| அளவையியல் | — | சர்மா |
| இந்துநாகரீகம் | } | காரை கெங்கா |
| இந்துசமயம் | | |
| தமிழ் | — | திருமதி மீரா |
| புவியியல் | — | சண் |
| கிறிஸ்தவம் | — | நிரஞ்சன் |

ஆரம்பம்:- 25-09-95

திங்கள் 8.00 a. m.

(ஏ-5313)


# பழையமூடிகளை மென்பானங்களுக்கு பாவிக்கக் கூடாதென அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

தமிழீழப் பகுதியில் தயாரிக்கப்படும் மென்பானங்களை அடைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் மூடிகளுக்கு அண்மைக்காலங்களில் ஏற்பட்ட கட்டுப்பாடு காரணமாக சில மென்பான உற்பத்தியாளர்கள் ஏற்கனவே பாவிக்கப்பட்ட மூடிகளை மீளவும் பாவிப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இம்முறையானது சுகாதாரச்சீர்கேட்டுக்கும் நோய்களுக்கும் காரணமாக அமையலாம் என்பதால், இவ்வாறு பழைய மூடிகளை உபயோகிக்க வேண்டமென்றும் இவ்வறிவுறுத்தலை மீறுவோர்மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர் ரி

# மருந்துவகைகளை அனுப்பக் கோரிக்கை

[வட்டுக்கோட்டை]

சித்தன்கேணிச் சந்திக்கருகாமையில் இயங்கிவரும் பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையில் தற்போது நோயாளர்களின் தொகை பெருமளவில் அதிகரித்துள்ளது.

சித்தன்கேணி, வட்டுக்கோட்டை பகுதிகளில் இயங்கி வந்த தனியார் வைத்தியசாலைகள் பல மூடப்பட்டு அங்கு கடமை புரிந்த டாக்டர்கள் இடம் பெயர்ந்து சென்றமையை அடுத்து இந்த வைத்தியசாலையில் நோயாளர் வருகை அதிகரித்துள்ளது.

வட்டுக்கோட்டை, சித்தன்கேணி, சங்கானை முதலான பகுதிகளில் வசிப்போர் பெருந்தொகையாக இந்த வைத்தியசாலையைப் பயன்படுத்துவதால் இவ்வைத்தியசாலைக்கு போதியளவு மருந்து வகைகளை அனுப்பிவைக்க சுகாதாரத்திணைக்கள அதிகாரிகள் அதிவிரைவில் ஆவன செய்ய வேண்டுமென இங்குள்ள பொதுமக்களும் பொது ஸ்தாபனங்களும் கேட்டுக் கொள்கின்றன. -139

## திருமலையில்

# ராணுவத்தால் தாக்கப்பட்டு சம்பளப் பணம் பறிப்பு

(திருமலை)

திருகோணமலை கடையில் ஒன்றில் வேலை செய்து விட்டு சம்பளப்பணம் மூவாயிரம் ரூபாயுடன் உப்பு வெளியிலுள்ள தமது வீட்டுக்கு சென்ற குடும்பஸ்தர் இராணுவத்தினரால் பலமாகத் தாக்கப்பட்டு வீட்டிற்கு வாங்கிக் கொண்டுபோன பொருட்கள் சம்பளம் ஆகியவற்றை இழந்து வெறுங்கையுடன் வீட்டுக்கு சென்று மயங்கி விழுந்தார்.

புங்குடுதீவைச் சேர்ந்த திரு அ ஆனந்தன் (வயது52) என்பவரே இராணுவத்தினரால் தாக்கப்பட்டு மயக்கமடைந்தவராவர். இவர் உடனடியாக திருகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் நடந்த 8ம் திகதி உப்புவெளி இராணுவ முகாமுக்கு அருகாமையில் நடைபெற்றது. 59-ரி

# தியாகி திலீபன் நினைவாக இன்று உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் 8வது ஆண்டு நினைவாக யாழ். மாவட்டத்தில் இன்று 21ம் திகதி நடைபெறும் உண்ணாவிரதங்கள் பற்றிய விபரங்கள்:

வலிகாமம் நல்லூர் வட்டம்! கோண்டாவில் பனை தென்னை வளம் வேதபாரயண ச. ச. நிலையம் கோண்டாவில், குமரகோட்டம் கோண்டாவில்,

வலிகாமம் - கோப்பாய் வட்டம்:

தெ. ப பொ. கூட்டுறவுச் சங்கம் கோப்பாய், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய் ச. ச. நிலையங்கள் கோப்பாய் உற்பத்திக் குழுக்கள், கோப்பாய் மாதர் சங்கங்கள், கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி உரும்பிராய் உற்பத்திக்குழுக்கள், உரும்பிராய் மாதர் சங்கங்கள், உரும்பிராய் ச. ச நிலையங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி, உரும்பிராய் வசாவிளான் மகாவித்தியாலயம்.

வலிகாமம் - சங்கானை வட்டம்; தெ. ப. பொ. சு. கூ. சங்கம். சுழிபுரம் மூளாய் சிற்றூர் மக்கள். விக்ரோறியாக் கல்லூரி மாணவர்கள்,

தீவகக் கோட்டம் [நல்லூர்] மயூரன் குடியிருப்பு மக்கள், தீவக கடற்றொழிலாளர் ஒன்றியம், ஊர்/ ப. நோ. கூ. சங்கம்

தென்மராட்சி [கைதடி] கைதடி சேதுகாவலன் வித்தியாசாலை, கைதடி மத்தி ச. ச. நி. குமாரநகர் உதயசூரியன் ச. ச. நிலையம், கைதடி மத்தி மாதர் மன்றம்.

[சாவகச்சேரி] தென்மட்டுவில், மட்டுவில் மத்தி கோயிற் குடியிருப்பு மக்கள்

[கொடிகாமம்] அறிவொளி, சுடரொளி நவசக்தி, சூரியகுமாரன், மரிக்கார் ச. ச. நிலையங்கள்

[பளை] இத்தாவில் சிற்றூர் மக்கள், பிரதேச செயலர் பிரிவு

வடமராட்சி [உடுப்பிட்டி] கலைவாணி, கலைமதி, சிவசுப்பிரமணியர் கொம்மந்தறை நூலகம், உறுப்பினர்கள் அப்பிரதேச மக்கள் கம்பர்மலை மகா வித்தியாலயம்

[கரவெட்டி] அல்வாய் சிற்றூர் மக்கள்

தியாகி திலீபன் நினைவாக கோட்டமட்டத்தில் மாணவர் அமைப்பினரால் ஒழுங்கு செய்யப்பட்ட உண்ணாவிரத நிகழ்வில் இன்றைய தினம் கரவெட்டியில் விக்னேஸ்வராக்கல்லூரி, பொன்னம்பல வித்தியாலய மாணவர்கள் கலந்து கொள்வர்.

கடற்புலிகளின் யாழ். மாவட்ட பிரதேசங்களில் வட்டரீதியாக நாகர் கோயிலில் ஒழுங்கு செய்யப்பட்ட உண்ணாவிரத நிகழ்வில் இன்று 21ம் ஆளியவளை மக்கள் கலந்து கொள்வர்.

நல்லூர் பிரதேச நூலகம்.



**மணிவாக்கு**

பகை, பொறாமை ஆகியவற்றை நீ வெளிப்பிட்டால், அவை வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வந்து சேர்ந்து விடும்.

- சுவாமி விவேகானந்தர்

# விமானம் நடுவானில் வெடித்ததை கண்டதாக சாட்சியங்கள் இல்லை

(கொழும்பு)

நடுவானில் அன்ரனோவ் விமானம் வெடித்து சிதறிய யதைக் கண்டதற்கு சாட்சியங்கள் எதுவுமில்லை. அவ்வாறு விமானம் வெடித்துச் சிதறியிருந்தால் அதன் சிதைவுகளும் உள்ளிருந்தவர்களின் சடலங்களும் கடலில் மிதந்திருக்கும்.

இவ்வாறு ஏயர் மொமடோர் ஜெயலத் வீரக்கொடி பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளார். இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்:

அன்ரனோவ் விமானம் அதிகளவு சுமையுடன் சென்றதாக கூறப்படுவதில் உண்மை எதுவுமில்லை. இந்த விமானம் 70 தொன் பாரத்தை சுமக்கக் கூடியது. ஆனால் அதில் 67 தொன் நிறையே ஏற்றப்பட்டிருந்தது.

விமானத்தினுள் ஏற்றப்பட்ட சிகரெட்டின் நிறையில் ஏதாவது வித்தியாசம் இருந்ததா என்பது குறித்து தற்போது சி. ஐ. டி பொலிசார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் இது குறித்து சிலோன் டுபாக்கோ கம்பனியிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். ஜ

# நமது நோக்கு

## இருவழி முறையும் தோல்வி

தீர்வுத்திட்ட யோசனைகள் பற்றிய விவகாரம் உச்சக்கொதிநிலைக்கு வந்துள்ளது. இவ் யோசனைகள் குறித்து தமது இறுதி முடிவை எடுப்பதற்காக பல்வேறு நிகாயக்களைச் சேர்ந்த பௌத்த பிக்குகள் அஸ்கிரியாவில் எதிர்வரும் 24ம் திகதி ஒன்றுகூடவிருக்கின்றனர். அங்கு முக்கியமான முடிவுகளை எடுக்கவுள்ளதாகக்கூறப்படுகிறது. சிங்களப் பௌத்த பேரினவாதிகளின் பிரதிநிதிகளாகிய இந்த பிக்குகள் என்ன முடிவெடுப்பர் என்பது தெரிந்ததே. தமிழர்களுக்கு கொடுக்கவேண்டியதெல்லாம் கொடுத்தாகிவிட்டது. மேலும் எதுவும் கொடுக்கவேண்டியதில்லை என்றே தீர்மானிப்பார்.

இதை அறிந்துதான் ஜனாதிபதி சந்திரிகா எதிர்வரும் முதலாம் திகதி மகாநாயக்கர்கள் மற்றும் பௌத்த தலைவர்களுடன் தனது யோசனைகள் பற்றி ஆராய்வதற்கு ஒரு கூட்டத்தை ஒழுங்குபடுத்தியிருந்தார். ஆனால் பௌத்தர்களும் இப்போது சாணக்கியம் படித்துவிட்டார்கள் போல தோன்றுகிறது. ஜனாதிபதியை முந்திக்கொண்டு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையே சகல பௌத்தமதத் தலைவர்களும் ஒன்றுகூடித் தீர்மானம் எடுத்துவிடுவதற்கு ஒன்றுகூடலை ஏற்பாடு செய்துள்ளனர். ஆகவே முடிவு எடுத்து விட்டால் பின்னர் ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தைக்கு இடமேயில்லாமல் போய்விடும்.

இதற்கிடையில் ஜனாதிபதி சந்திரிகா தனது தீர்வு யோசனைகள் பற்றி பகிரங்க விவாதமொன்றை ரூபவாகினியில் நடத்துவதற்கு வரும்படி எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு சவால் விடுத்துள்ளார். தனது யோசனைகளுக்கு சிங்கள மக்கள் மத்தியில் பெரும் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளதால் மிக ஆத்திரமடைந்தநிலையில்தான் சந்திரிகா இந்தச் சவாலை விட்டிருக்கிறார்.

அவர் எந்த யோசனைகள் பற்றி விவாதிக்கப் போகிறார்? முதலில் வெளியிட்ட யோசனைகள் பற்றியா? அல்லது அந்த யோசனைகள் படிபடியாகத் திருத்தப்பட்டு, இப்போதுள்ள நிலையில் இருக்கும் யோசனைகள் பற்றியா அவர் விவாதிக்கப்போகிறார்? தமிழர்களுக்கு எதுவித சலுகைகளையும் அளிக்காத இவ் யோசனைகளை, இப்போது சிங்களவர்கள் தங்கள் அரசியல் செல்வாக்கை அதிகரிக்க அல்லது மற்றவரின் செல்வாக்கைக் குறைப்பதற்காகத் தூக்கித் தலையில் வைத்துக்கொண்டு ஆடுகிறார்கள்.

சந்திரிகாவின் தீர்வு யோசனைகள், அரசியலில் சிங்களவர்கள் மத்தியில் குழப்பத்தை உருவாக்க அவரின் இராணுவத் தீர்வு பற்றிய செயற்பாடும் மந்த நிலையில்தான் உள்ளது.

யாழ். குடாநாடு மீதான தாக்குதல்கள் பற்றிய இரகசியத் திட்டம் விடுதலைப் புலிகளுக்குக் கிடைத்துள்ளதாகவும், இது எப்படி அவர்களுக்குக் கிடைத்தது என்பது பற்றியும் இராணுவத் தலைமைப்பீடம் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ளதாகவும், அவர்களுக்கு அது கிடைத்ததால் படையினரின் நடவடிக்கையில் பாரிய பின்னடைவு ஏற்படும் நிலை தோன்றியுள்ளதாகவும் கூறப்படுகிறது. இயலாதவர்கள் கூறும் சாக்குப்போக்குகள் போல்தான் இராணுவத்தினரது இக்கூற்று. பலாலி விமானத்தளம் மீது விடுதலைப் புலிகள் நடத்தும் சேத விபரங்களை ஒழித்து மறைக்கும் இராணுவத்தினர், தங்களது இயலாமைக்குச் சாக்குப் போக்குக் கூறித் தப்பிக்கப் பார்க்கிறார்கள். யாழ்ப்பாணத்தின் மீது பாரிய தாக்குதல்களைச் செய்தால் பொதுமக்களுக்கு உயிர்ச் சேதம் ஏற்படும் என்றும் அவர்கள் நீலிக்கண்ணீர் வடிக்கிறார்கள். மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல்கள் என்று கூறிக்கொண்டு படையினர் நடவடிக்கையில் இறங்கும் வேளைகளில்கூட யார் பாதிக்கப்படுகிறார்கள், கொல்லப்படுகிறார்கள், இடம் பெயர்கிறார்கள். இவை எல்லாம் நடப்பதும், நடந்துகொண்டிருப்பதும் பொதுமக்களுக்குத்தான். தங்களுக்கு உயிர் ஆபத்து வந்துவிடுமே, தப்பிப் போக வழியில்லையே என்பதுதான் படையினரின் தயக்கத்துக்குக் காரணம்.

எனவே சந்திரிகாவின் இருவழி முறைகளான அரசியல் தீர்வு யோசனைகளும் இராணுவ ரீதியிலான செயல்பாடும் தோல்வியிலேயே முடியப் போகின்றன.

# தீர்வுதிட்டம் குறித்து பௌத்த அமைப்புகள் அக். 1-ம் திகதி சந்திரிகாவுடன் சந்திப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக முன் வைக்கப்பட்டுள்ள தீர்வுத்திட்டம் குறித்து சகல பௌத்த மத பீடாதிபதிகளும் பௌத்த அமைப்புகளும் அக்டோபர் மாதம் 1ம் திகதி ஜனாதிபதி சந்திரிகாவுடன் முக்கிய சந்திப்பொன்றை நடாத்தவுள்ளன.

அலரிமாளிகையில் நடைபெறவுள்ள இந்த சந்திப்பில் கலந்து கொள்வதாக பௌத்த பீடாதிபதிகளும் அமைப்புகளும். ஜனாதிபதிக்கு உறுதியளித்துள்ளன

இதற்கிடையில் தீர்வுத்திட்டம் குறித்து பௌத்த பீடாதிபதிகள் தங்களது இறுதி முடிவை எடுக்கவுள்ளன. இந்த முடிவு குறித்து அவை ஜனாதிபதிக்கு தெரிவிக்கவுள்ளன.

இதேவேளை இந்த தீர்வுத் திட்டத்திற்கு பௌத்தபீடாதிபதிகளும் பௌத்த அமைப்புகளும் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருவதும் தெரிந்ததே. ஏ

## கண்டி தொழில்நுட்பக் கல்லூரியில் தமிழ்மூல பாடநெறிப் பரீட்சைகள் ஒத்திவைப்பு

(கண்டி)

கண்டி அருப்பொல தொழில் நுட்பக் கல்லூரியில் தமிழ் மூல பாட நெறிக்கான பரீட்சைகள் இரண்டாவது முறையாகவும் கால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

முன்பு ஒரு முறை தமிழ் மொழிமூல உயர்தேசியக் கணக்கியல் டிப்ளோமா பரீட்சை நடைபெறாமல் போனபோது இது போன்ற தவறு இனி நடைபெறாது என நாடாளுமன்றத்தில் கல்வி உயர் கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரன வாக்குறுதி அளித்திருந்தார்.

ஆனால் இரண்டாவது தடவையாகவும் தமிழ் மொழி மூல பரீட்சைகள் யாவும் கால வரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேற்படி சிங்கள மொழிமூல பரீட்சை நடைபெற்று விட்டது.

அது தமிழ் மாணவர்களுக்கு பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இதனால் இத் தமிழ் மாணவர்கள் பலவேறு துறைகளிலுமான வேலை வாய்ப்புக்களைப் பெறமுடியாத துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. ர

## திருட்டு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கு மீன் பிடிச் சங்கத் தலைவர் எஸ்.கந்தசாமியின் இருபத்தி ஐயாயிரம் ரூபா பெறுமதியான டிஸ்கோ மீன்பிடி வலைகள் கடந்த 16 ஆம் திகதி இரவு கொழும்புத்துறை கடலில் திருடப்பட்டுள்ளது.

இத் திருட்டுப்பற்றி இவரால் தமிழீழக் காவல்துறையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. 154-மி

## இராசி பலன்

**21-09-1995**

வியாழக்கிழமை

(தமிழுக்கு புரட்டாதி-4)

துவாதசி மு. இ. 10 42 வரை; ஆயிலியம் பி. இ. 2-25 வரை சித்தாமிர்த யோகம், இராகுகாலம் பி. ப 1-32 முதல் 3-02 வரை சுப வேளை காலை 7-32 முதல் 9-02 வரை.

மேடம்; குடும்ப வேற்றுமை கடன் பிரச்சனை, அமைதியின்மை.

இடபம்: தொழில் விருத்தி தன்மதிப்பு, மருத்துவ செலவினம்.

மிதுனம்: எதிர்பாராத சோதனை, அமைதிக்குறைவு, பயணதடை.

கடகம்: தொழில் மாற்றம், பணவரவு, காரியசித்தி,

சிங்கம்: அதிகாரிகள் கண்டனம். சுபவிரயம், விரோதிகள் பயம்.

கன்னி: கருத்தொற்றுமை, சகோதர நன்மை, முயற்சி வெற்றி.

துலாம்: குடும்ப குதூகலம், அயலவர் உதவி, தெய்வ சிந்தனை.

விருச்சிகம்: தொழில் நஷ்டம், முதியவர் பகை, கோப வார்த்தை.

தனுசு: குடும்ப சச்சரவு, போட்டி பொறாமை, மனப் பயம்.

மகரம்: கல்வியியல் சிந்தனை, புத்திரர் செலவு, புதிய முயற்சி.

கும்பம்: நினைத்தது நிறைவேறல், தாயார் அறிவுரை, தானதர்மம்.

மீனம்; மனசங்கடம், சிக்கலானபிரச்சனை, கெட்டபெயர்

— ஜோஸ்யர்

# கொழும்பு விடுதிகளின் வாடகை அதிகரிப்பு

(சாவகச்சேரி)

கொழும்பில் உள்ள விடுதிகளில் வாடகைப் பணம் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. முன்பு ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 150 ரூபாவில் இருந்து 250 ரூபாவாக இருந்த வாடகைதற்பொழுது 500 ரூபாவுக்கு மேல் அதிகரித்துள்ளது.

கொழும்பு நகர்ப் பகுதியில் திடீர் திடீர் என இராணுவத்தினரும், பொலிசாரும் கூட்டாக நடத்திவரும் தேடுதல் நடவடிக்கையின் போது தமிழ் இளைஞர்கள், யுவதிகள் கைதாகி வருகின்றனர்

தேடுதல் சுற்றி வளைப்பின் பொழுது குறித்த பகுதி தொலைபேசிகளை செயலிழக்கச் செய்வதுடன் கைது செய்யப்படுவோர் பெரும் தொகைப் பணத்தை கொடுத்தால் விட்டு விடுவார்கள்.

இதேவேளை கொழும்பு நகரில் உள்ளவீதி நடைவியாபாரிகள் கழுத்தில் அடையாள அட்டைகளை தொங்க விட்டபடியே வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்களாம். இராணுவத்தால் அவர்களுக்கென கொடுக்கப்பட்டுள்ள விசேட கலர் அடையாள அட்டைகளை இவர்கள் கழுத்தில் தொங்க விட்டுள்ளார்கள். 155-மி

## சிந்து பாடிய பூங்குயில்

திலீபன் என்றொரு தியாக நெருப்பு
தீந்தமிழர்க்கு இவன்மேல் எத்தனை விருப்பு
ஐந்து அம்சக் கோரிக்கை காட்டிய
அகிம்சை வழிக்கு புதுத்தத்துவம் சொன்னவன்
சிந்து பாடிய இந்தப் பூங்குயில்-தமிழர்
சிறுமை கண்டு கொதித்தெழுந்தது
நைந்து போன தமிழருக்காகவே-இந்த
வீணை நரம்புகள் அறுந்து போனது
காந்தியப் போர்வையில் வந்த இந்தியன்
கரங்களிலே இவன் கத்தியைக்கண்டவன் -இவர்கள்
ஏந்திய ஆயுதம் எம்மை அழிக்குமென்று
எடுத்துச் சொன்னவன்
முத்தியிங்கு வந்தோரெல்லாம்
முழுதாய் எம்மை அடிமை கொண்டனர்
இந்த நிலையை மாற்றியமைத்து
ஏற்றிடவேண்டும் புலிக்கொடியென்றவன்

- வேலணைவூர் பாக்கியன்

# நிதி முகாமைத்துவ பயிற்சி

(மானிப்பாய்)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியுதவி அளிக்கப்படும் நிதி முகாமைத்துவப் பயிற்சி நெறியின் 5 வது சுற்று யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் கடந்த வாரம் ஆரம்பமாகியுள்ளது.

இப்பயிற்சி வகுப்பு யாழ். மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்களில் பணிபுரியும் கணக்கு எழுதுகின்ற கணக்குப்பதிவுனர்களுக்கு நடாத்தப் படுகிறது. -71

# 1833-இல் கோல்புறாக் - 1965-இல் திருச்செல்வம்

கோல்புறாக் ஆரம்பித்து திருச்செல்வம் வரையிலான 130 வருடங்களில் குடியேற்ற ஆதிக்கம் மங்கிப்போன வருடங்களில் அதுவரை இலைமறைகாயாக ஒளிந்திருந்த சிங்கள மேலாதிக்கப் பேராவல் -தமிழர்மீதான மேலாதிக்கபேராவல வளர்ச்சி கண்டு விட்டது.

கோல்புறாக் அதற்கு வித்தூன்றிவிட அது முளைவிட்டுக் கிளைபரப்பி ஆழவேரூன்றிப் பெருவிருட்சமாகித் தழைக்கின்றநிலையைப் பிற்பாடு திருச்செல்வத்தின் அரசியல் பிரசன்னம் வெளிச்சம் போட்டுக்காட்டிவிட்டது.

இப்படியாக வரலாற்றுப் பாதையின் சரிவுப்புள்ளிகளில் வைத்து இலங்கைத் தமிழர்களை நெட்டித்தள்ளிய நிகழ்வுகளில் இவ்இருவரும் சம்பந்தப்பட்டுள்ள அதிசய ஒற்றுமையை நாம் காணலாம்.

1815 இல் கண்டி இராச்சியத்தை பிரிட்டிஷ் அரசு தன்னுடன் இணைத்துக்கொண்டது. தொடர்ந்து 1833 இல் கோல்புறாக்கினால் இலங்கையின் மூன்று இராச்சியங்களும் ஒன்றாக இணைக்கப்பட்டன. இவ்இணைப்பு சிங்களவர்களுக்கே நன்மை பயப்பதாய் முடிந்தது.

முழுத்தீவையும் ஒருகுடைக்கீழ் ஆள பிரிட்டிஷ் அரசு நோக்கம் கொண்டதால் எல்லா மக்களும் அவரவர் அரசியல் அமைப்புக்கள் உட்பட காலப்போக்கில் தவிர்க்க முடியாநிலையில் கலப்புற்றனர்.

தமிழர்கள் மீது ஆதிக்கம் செலுத்த விழையும் சிங்களப் பேராவல் மீள உயிர்த்தெழுந்தது.

போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் ஆக்கிரமிப்பின் கீழும் 100 வருட பிரிட்டிஷ் ஆட்சியின் கீழும் நீறுபூத்த நெருப்பாக அவிந்து கொண்டிருந்த இவ்அவா 1833 இல் நடந்த இரகசிய இணைப்பின் வெளிப்படையாக உருக்கொள்ளத் தொடங்கிற்று....

அந்தப் 19ம் நூற்றாண்டுக் கோல்புறாக்கும் இந்த 20ம் நூற்றாண்டுத் திருச்செல்வமும் கிட்டத்தட்ட ஒரே வகையில் செயற்பட்டு ஒரே விளைவுக்கு வழிகோலிவிட்டுள்ளனர். படைபலத்தை பிரயோகித்து இராச்சியங்களின் இணைப்பை ஏற்படுத்தி தமிழர் மீதான சிங்கள மேலாதிக்கப் பேராவலுக்கு வழிவகுத்து விட்டவர் அன்றைய கோல்றாக்...

அதுபோன்ற வழியையே சிக்கெனப் பின்பற்றி அதே மேலாதிக்கப் விசுவரூபம் கொள்ள இன்றைய திருச்செல்வம் முன்னின்று உதவினார்.

"தமிழர் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்" என்ற நூலை முன்னாள் காவலூர் நாடாளுமன்ற அங்கத்தவரும் 'சுயாட்சிக் கழகத்தை' உருவாக்கியவருமான வி.நவரத்தினம் அவர்கள் எழுதியுள்ளார். அவரது நூலிலிருந்து ஒரு பகுதியின் சாராம்சம் தரப்படுகின்றது.

பின்விளைவாக இன்னது தான் நிகழப்போகின்றது என முற்கணிப்புச் செய்யாமலேயே இவ்விருவரும் செயற்பட்டிருக்கலாம். எவ்வாறாயினும் அவரவர் காலத்தில் நிகழ்ந்த பாரதூர விளைவுகட்கு உந்து கருவியாகத் தொழிற்பட்டவர் என்ற குற்றச்சாட்டிலிருந்து இவர்கள் இருவரும் தப்பமுடியாது. இருவருக்கும் இடையே சுட்டிக்காட்டக்கூடிய வித்தியாசமும் ஒன்றுண்டு...

ஒருவர் தன் நாட்டின் ஆணையை நிறைவேற்ற வந்த அரச சேவையாளர். மற்றவர்— யாருடைய நலன்களைக் காக்கவென நியமிக்கப்பட்டாரோ, அதே நலன்கள் பங்கமுறுவதற்காகச் சேவை ஆற்றியவர் இரண்டாமவர். —இது தான் அவ்வித்தியாசம்...

புதிதாக வெற்றி கொள்ளப்பட்ட நாட்டில் இணைந்த நிர்வாகத்தை ஏற்படுத்தவும், வரிச் சேகரிப்பை இலகுவாக்கவும் திட்டமிடுமாறு ஆணையிடப்பட்ட கோல்புறாக், சொந்த நாட்டின் உத்தரவை நிறைவேற்றச் செயற்பட்டார் என்றுவது சொல்லிக்கொள்ள முடியும்.

எந்தப் பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தைக் கட்டியெழுப்ப உதவினாரோ, அந்த இராச்சியம் காலப்போக்கில் வீழ்ச்சி கண்டு முடிவுக்கு வருமென முற்கணிப்புச் செய்யக் கோல்புறாக்கினால் முடியாமல் இருந்திருக்கலாம்.

அவரது காலத்தில் வாழ்ந்த தமிழர்கள் போதிய நாகரிக வளர்ச்சி அடையாமல், கத்தி, வாள், கேடயம் கொண்டே தம்மைக் காக்கத் தலைப்பட்டனர். விளைவாக அந்நியர்களது சுடுகலன்களால் தாக்கப்பட்டு விரைவில் அழிந்துபட்டார்கள்— பண்டாரவன்னியனும், வன்னியின் ஏனைய ஆதிவாசித் தலைவர்களும் போரிட்டு மடிந்தமை போன்று அழிந்துபோனார்கள்.

இப்படியாகப் பிரிட்டிஷ் அரசின் கீழ் ஒடுக்கப்பட்டு வாழ்ந்த அவர்களுக்கு மேற்கத்திய அரசியல அறிவு புகட்டி வழிநடத்த அக்காலத்தில் 1833 இல் எவரும் இருக்கவில்லை.

மேற்சொன்ன விடயம் திருச்செல்வம் விடயத்தில் பொருந்தாது. அவர் 20ஆம் நூற்றாண்டின் நன்கு கல்வி கற்ற தொழில் ரீதியான மனிதர்களில் ஒருவர். நவீன உலக அரசியல, உள்நாட்டு அரசியல் என்பவற்றில் ஆழமான அறிவு பெற்றவர். இலங்கைத் தமிழருக்கான அரசியலில் நுழையும்போது, அவர்கட்குச் சேவையாற்றக் கூடிய வகையில் சிந்தனைத் திறனும் ஏனைய தராதரங்களும் கொண்டிருந்தார். —தீ

# ஜே. ஆரை மையமாக வைத்தே அதிரடிப்படைப்பிரிவு அமைக்கப்பட்டது

(கொழும்பு)

இன்று பெரும் சர்ச்சைக்கும் கண்டனத்துக்கும் உரியதாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் விசேட அதிரடிப் படை பிரிவு முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனாவின் பாதுகாப்பை மையமாகக் கொண்டு அவரது புதல்வர் ரவி ஜெயவர்த்தனாவால் ஆரம்பிக்கப்பட்டது.

சிக்கலான சவால்களைக் கையாளும் வகையில இலங்கையில் விசேட அதிரடைப் பிரிவு அமைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டபோதிலும் இதனை ஆரம்பித்தது நாட்டின் பாதுகாப்புக்கு அல்ல, முற்றிலும் தமது தந்தையாரை மையமாக வைத்தே அவரது பாதுகாப்புடன் இணைந்த வகையிலேயே விசேட அதிரடிப் படையை ரவி ஜெயவர்த்தனா உருவாக்கியிருந்தார்.

தமது சொந்த வாழ்வில் குழப்பமான சூழ்நிலைகளைக் கொண்டவராகவும், சித்தப் பிரமையையொத்த மனநிலையைக் கொண்டவராலும் உருவாக்கப்பட்ட விசேட அதிரடிப்படையே இன்று நாட்டில் சர்ச்சைக்குரியதாக விமர்சனத்துக்குள்ளாகியுள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

உலகில் ஒவ்வொரு நாட்டிலும் பாதுகாப்பு படைகளில் 'விசேட அதிரடிப் படை' என்ற உப பிரிவு காணப்படுவது வழக்கமாகும்; கமாண்டோக்கள் என்றும் அதிரடிக் குழாம் என்றும் இந்தப் பிரிவுகள் தத்தமது நாட்டின் பாதுகாப்பு நிலவரங்களுக்கு ஏற்பவும் நவீன வசதி வாய்ப்புகளுக்கு ஏற்பவும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவில் SWAT, ATF என்ற விசேட அதிரடிப் படைப் பிரிவுகள் காணப்படுகின்றன

விமானக் கடத்தல் நாடகம் மற்றும் பணய நாடகம், போதைவஸ்துப் புள்ளிகளின் மிரட்டல்கள் போன்றவற்றிலிருந்து அப்பாவிப் பொது மக்களைப் பாதுகாப்பதே இந்த விசேட பயிற்சி பெற்ற படைப் பிரிவுகளின் கடமையாக இருக்கிறது.

ஆனால் இலங்கையில் மக்களை சித்திரவதை செய்து கொலை செய்வதே அதிரடிப் படையினரின் வரலாறாக இருக்கிறது. -ரி

★ உலகெங்குமுள்ள

# அன்ரனேவ் விமானங்கள் பரிசீலனை செய்யப்படுகிறது

(கொழும்பு)

'அன்ரனேவ்' விமானம் விபத்துக்குள்ளானதையிட்டு உலகம் பூராவிலுமுள்ள அன்ரனேவ் 32 ரகவிமானங்கள் பரிசீலனைக்குஉட்படுத்தப்பட்டிருக்கின்றது என்று 'ராவய' தெரிவித்துள்ளது.

இதேவேளை இந்த விமானங்கள் பயணத்தை மேற்கொள்வதற்கு முன்பு. பரிசோதனை செய்யப்பட்டபின் பிரயாணத்தை மேற்கொள்கின்றன என்று 'ராவய' மேலும் தெரிவித்துள்ளன. -ம-மீ

## இன்றைய சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவ 'பி' நடாத்தும் சொற்பொழிவு நிகழ்வில் திரு. எஸ் உருத்திரலிங்கம் "புனர்நிர்மாணத்திற்காக வெடிப் பொருள்களின்றி கட்டிடங்களின் தகர்ப்பு" என்னும் பொருளில் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

இந்நிகழ்வு இன்று மாலை 3-00 மணியளவில் யாழ். பல்கலைக்கழக பௌதீக விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. -ர-மி

# சிறிலங்கா முப்படைகளின் மீதும் சர்வதேச ரீதியில் கண்டனம்

[கொழும்பு]

சிறிலங்கா பாதுகாப்புபடைகளின் நடவடிக்கைகள் சர்வதேச மனித நேய அமைப்புக்களின் கடும் கண்டனத்துக்கும் அவதூறுக்கும் உள்ளாகிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு படைகளின் தலைமைப் பதவிகளில் உள்ளோருக்கே தமது படையணியில் உள்ள உப பிரிவுகள் அவற்றின் பணிகள் என்பன பற்றி புரியாதவகையில் பல்வேறு சக்திகளும் படைகளினுள் ஊடுருவிக் காணப்படுகின்றன.

இதன்காரணமாகவே இன்று சிறிலங்கா படைகளின் நடவடிக்கைகள் சர்வதேசரீதியா கண்டிக்கப்பட்டு வருகிறது.

இராணுவம் பலதடவைகள் மனித உரிமை மீறல் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதுடன் விசேட அதிரடிப்படையின்நடவடிக்கையினால்படையினருக்கு பெரும் தலைகுனிவும் ஏற்பட்டுள்ளது.

இந்த விசேட அதிரடிப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட கொலைகள் குறித்த தகவல்கள் மயிர்க்கூச்செறியச் செய்வனவாக இருக்கின்றன என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் உட்பட அரசு தரப்பினர் விசேட அதிரடிப்படையினரின் நடவடிக்கைகளை வெளிச்சத்துக்கு கொண்டுவந்துள்ள அதே சமயம், அப்படையிலுள்ள ஒரு சிலரினாலேயே அந்த முழுப் படையும் அவதூறுக்கு உள்ளாகியுள்ளது என்றும் தெரிவித்துள்ளனர். -ரி

## மா விநியோகம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்க கிளைகளில பங்கீட்டு அட்டைக்கு தலா ஐந்து கிலோ மா விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

இதேவேளை இடம்பெயர்ந்தோருக்கான 28 பி புள்ளிக்கான உலர் உணவு நிவாரணப் பொருட்களும் கிளைகள் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. 72ஜி

## சந்திரிகா வருகை

வெண்டா மரைக்கள்ளி
வெள்ளைப் புறுதிருடி
பண்டாரப் பையோடு
பவனி போய்-கொண்டாடி
கண்டாளே கோணமலைக்
கடலில் கலங்கல் விழத்
திண்டாடித் திரும்பி
னாளே

தந்தை தமிழ் அழித்தான்
தாய்தமிழ் இனம் அழித்தாள்
சொந்தவொரு மாமன்
துணையாக-வந்தாளே
சந்திரிகா நம்தமிழர்
தாயகத்தைச் சிதைத்துப்பின்
இந்தநிலத் தீண்டோ
வென

— தில்லைச்சிவன்

# அன்ரனேவ் விமானத்தை தயாரித்த உக்ரேன் குழு கொழும்பு விரைவு

(கொழும்பு)

விபத்துக்குள்ளான அன்ரனேவ் விமானத்தைத் தயாரித்த உக்ரேன்நாட்டு கம்பனிக் குழுவினர் நேற்று முன்தினம் இரவு கொழும்பு வந்துசேர்ந்தனர்.

கேவ் நகரிலுள்ள இந்த விமான உற்பத்தி கம்பனியின் தலைவர் திரு விலாடிமிக் தெரிவிக்கையில்; விபத்து எவ்வாறு சம்பவித்தது என்பது பற்றி விசாரிப்பதோடு. விபத்து சம்பந்தமான சகல விபரங்களும் பெறப்படுவதே தங்கள் நோக்கம் ஆகும் என்றார்.

கடலில்வீழ்ந்த விமானத்தை மீட்கும் வழிவகைகள்பற்றியும் குழு ஆராயும், விமான செயற்பாடு. அதன் பாகங்கள் சம்பந்தமான பூரண அறிக்கையில் இந்தக் கம்பனியின் குழு விமானப் படையிடம் ஏற்கனவே கையளித்துள்ளது.

விமானம் புறப்படுவதற்கு முன்னர் அதைப் பரிசோதித்த உத்தியோகத்தரின் அறிக்கையை ஒப்பிடுவதும் தமது முதலாவது பணி என குழுவினர் தெரிவித்தனர்.

இலங்கையின் சீதோஷ்ண நிலையைத் தாக்குப்பிடிக்கும் வகையில் இந்த விமானம் சீர் செய்யப்பட்டது என்றும் குழுவின் தலைவர் தெரிவித்தார்.

உலகிலுள்ள 30 நாடுகளுக்கு இக்கம்பனி இத்தகைய விமானங்களை வழங்கி வருகிறது; இந்த விமானங்களில் விபத்துக்கள் ஏற்படுவது மிகவும் அரிதாகும்.

இலங்கைக்கு வழங்கப்பட்ட 3 விமானங்களும் சர்வதேச தரத்திற்கு ஏற்ப தயாரிக்கப்பட்டது. இந்த விமானங்களை ஓட்டுவதற்கு 2 விமான ஓட்டிகளுக்கு ஒரு மாத கால பயிற்சி அளிக்கப்பட்டது. விபத்துக்குள்ளான இந்த விமானம் குறிப்பிட்ட உயரத்திற்கும் மேலாக பறந்துள்ளது என்றும் குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த குழுவினர் ஏனைய இரண்டு அன்ரனேவ் விமானங்களையும் பரிசோதனை செய்யவுள்ளனர். கே-மீ

## வங்கிகளில் பணம் தட்டுப்பாடு வாடிக்கையாளர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள வங்கிக் கிளைகளில் பணம் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் வழங்கப்பட்டுவருவதனால் வாடிக்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பில் இருந்து வங்கிகளுக்கு பணம் வந்து சேராததனால் வங்கிகளில் பணத் திற்கு பெரும் நெருக்கடி ஏற் பட்டுள்ளது.

இதனால் வாடிக்கையாளர்கள் வங்கிகளில் நாளாந்தம் வைப்பிலிடும் பணத்தைக் கொண்டே வங்கிகள் மட்டுப் படுத்தப்பட்டு பணத்தை வழங்கி வருகின்றன. 170-மி

## அனுமதி அட்டைகளை பெறலாம்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவகப் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பகுதி I, பகுதி IIக்குரிய வினாத் தாள்களும் அனுமதி அட்டைகளும் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டுள்ளன.

பரீட்சார்த்திகள் அனுமதி அட்டைகளை இன்று வியாழக் கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும், நாளை வெள்ளிக்கிழமை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும் பிற்பகல் 2 00மணிக்குப் பெற்றுக்கொள்ளலாமென சிரேஷ்ட விரிவுரையாளர் திரு தி கமலநாதன் அறிவித்துள்ளார். -சி

## தெற்கே

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக உயர் மட்ட பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகவும் எனினும் வேலை நிறுத்தம் செய்வோர் தமது கோரிக்கைகள் குறித்து உத்தியோகபூர்வமாக அறிவிக்க வில்லையென அரச தரப்பினர் தெரிவித்துள்ளனர். க-சி

## பலாலி ஷெல்

(1ம் பக்க தொடர்ச்சி)

வீதியில் உள்ள வீடு ஒன்றில் வீழ்ந்து வெடித்தபோதே இத்தகொடூரம் நிகழ்ந்துள்ளது

புன்னாலைக் கட்டுவனில் இருந்து இடம் பெயர்ந்து உரும்பிராய் வடக்கில் வசித்த வந்த அம்பலவாணர் நவரட்ணம் [வயது- 72] என்பவரும் இவரது மருமகன் இ. இராஜகோபால் [வயது 54- சுன்னாகம் பல நோக்கு கூட்டுறவுச் சங்க ஊழியர்] என்பவருமே உடல் சிதறிப் பலியானவர்களாவர்

இச் ஷெல் தாக்குதலால் விதயானந்தன் [வயது 18], சு. சிறீதரன் [வயது 40], சி. தில்லைநாயகி [வயது 39], ரா. சேதீஸ்வரன் [வயது 18] சி. தனேஸ்வரன் [வயது 8], திருமதி இ. முத்துப்பிள்ளை [வயது 88] ஆகியோர் படுகாயமடைந்தனர்.

ஒரு வீட்டிலேயே இந்த கொடூர சம்பவம் இடம்பெற்றதால் வீடு இரத்த வெள்ளத்தில் காணப்பட்டது.

இதனைவிட உரும்பிராய் வடக்கில் வீழ்ந்த மற்றுமொரு ஷெல்லுக்கு இலக்கான திருமதி த. புஸ்பலதா [வயது 31] என்பவர் படுகாயமடைந்தார். காயமடைந்த அனைவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினர் நள்ளிரவு வேளையில் மேற்கொண்ட ஷெல் தாக்குதலினால் உரும்பராய் பகுதி மக்கள் பெரும் பதட்டத்துடன் இரவை கழித்தனர். சிலர் இரவோடு இரவாக இடம்பெயர்ந்தனர்.

இராணுவத்தினர் மேற்கொண்ட ஷெல்கள் புன்னாலைக் கட்டுவன், ஊரெழு பகுதிகளிலும் வீழ்ந்து வெடித்துள்ளன. 170-சி

## யாழ். குடாவில் தே. எண்ணெய் தயாரிப்பதில் ஆர்வம்

[யாழ்ப்பாணம்]

யாழ். குடாநாட்டு மக்கள் தேங்காய் எண்ணை தயாரிப்பில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தேங்காய் கொப்பறாவை காயவைத்து மக்கள் தேங்காயெண்ணையை காய்ச்சி வருகின்றனர்.

குடாநாட்டில் தேங்காய் எண்ணைக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதால் தேங்காய் யெண்ணையின் விலை லீற்றர் 140 ரூபாவாக விற்கப்படுகின்றது. - 170

## பஜ்ரோ

(1ம் பக்க தொடர்ச்சி)

ந்தனர். பஜ்ரோவும் தகர்க்கப்பட்டது.

இந்த இராணுவ முகாமிலிருந்து சுமார் 450 மீற்றர் தூரத்தில் வைத்து நடாத்தப்பட்ட இத்தாக்குதலில் இராணுவத்தினரின் பஜ்ரோ வாகனம் விடுதலை புலிகளால் முற்றாக அழிக்கப்பட்டது.

படுகாயமடைந்த இராணுவத்தினர் இருவரும் தப்பியோடிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. க-சி

## முதனிலை— இளநிலை தேர்வு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ முதனிலை இளநிலைத் தேர்வுக்கான நுழைவுப் படிவங்கள் இன்று வியாழக்கிழமை கல்விக்கோட்ட அலுவலகங்களில் ஒப்படைக்கப்படவுள்ளன. அத்துடன் நுழைவுப்படிவங்களை நிரப்புவதற்கான அறிவுறுத்தல்களும் அனுப்பப்படுகின்றன.

பள்ளிக்கூட அதிபர்கள் இவற்றைப் பெற்று படிவத்தில் சேர்க்கப்பட்டுள்ள தரவுகளை அறிவுறுத்தலின் படி நிரப்பி கோட்டக் கல்வி அலுவலகத்தில் 29ம் திகதி வெள்ளிக்கிழமைக்கு பிந்தாமல் ஒப்படைக்குமாறு தேர்வு ஆணையாளர் கேட்டுள்ளார். சி

## மாவுடன் ஹெந்தல விரைவில் வரும்

(யாழ்ப்பபணம்]

திருகோணமலை துறைமுகத்திலிருந்து கோதுமை மா ஏற்றப்பட்ட நிலையில் கொழும்புக்கு திசைதிருப்பப்பட்ட ஹெந்தல கப்பல்விரைவில் மாவுடன் பருத்தித்துறை துறை முகத்திற்கு அனுப்பி வைக்கப்படுமென அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் யாழ் மாவட்ட அரசாங்க அதிபருக்கு அறிவித்துள்ளார்.

கொழும்பு நகரில் மாவுக்கு ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாட்டைப் போக்குமுகமாகவே ஹெந்தல கப்பல் மாவுடன் கொழும்பு கொண்டு செல்லப்பட்டதென்றும் இக்கப்பல் விரைவில் திருகோணமலை சென்று மா ஏற்றிக்கொண்டு பருத்தித்துறை வந்து சேரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 162-சி

# அரைகுறைத் தமிழனும் அன்ரனேவ் விமானி பாக்கியநாதன்

(கொழும்பு)

'எனது கணவர் வருவார்' என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார் கடலில் வீழ்ந்த அன்ரனேவ் விமானத்தின் விமானியின் மனைவியான மேரி ரஞ்சன் பாக்கியநாதன் (29 வயது) தனதுகணவன் விமான விபத்தில் இறந்ததை இன்னும் அவர் நம்ப வில்லையாம் இவர்களுக்கு ரைனி[5வயது] ஜெகன்[4 வயது] இரு குழந்தைகளும் இருக்கிறார்கள்.

அண்மையில் தங்களது 6வது திருமண நினைவு நாளை கோலாகலமாக கொண்டாடி பூரித்திருந்த வேளையில் இறந்ததற்கான எந்தத் தடயங்களும் கிடைக்காத வரை தனது கணவன் றஞ்சன் பாக்கிய நாதனுக்கு இப்படி ஓர் நிலைமை ஏற்பட்டதை அவரால் ஏற்றுக் கொள்ள முடியாதிருக்கின்றதாம்.

இந்த விமானம் நொருக்கி விழுந்ததற்கு றஞ்சன் பாக்கிய நாதன் தான் காரணம் என்று தென் இலங்கையில் பரவலாக செய்திகள் அடிபட்டதைத் தொடர்ந்து பாக்கியநாதனின் தாயார் நிருனறி பாக்கியநாதன் இந்தப் பழிச் சொல்லை ஏற்றுக் கொள்ள முடியாது இருக்கிறார்.

பாக்கியநாதன் ஒரு தமிழன் அவன் வேண்டுமென்றே விமானத்தை ஓட்டிச் சென்று விபத்துக்குள்ளாகி இருக்கிறார் என்று எங்களுக்கு சொல்லப்பட்டது. இது எங்களுக்கு செய்யப்பட்ட மிகப் பெரிய அவமானமாகும். இதனை தாங்க முடியாதுள்ளது என்கிறார்.

முன்னாள் ஜனாதிபதிகளான திரு. பிரேமதாசா, டி பி விஜயதுங்க, ஜே ஆர் ஜெயவர்த்தன தற்போதையஜனாதிபதி சந்திரிகா ஆகியோரின் வெளிநாட்டு உள்நாட்டு விமான பயணங்களுக்கு இவரே விமானியாகக் கடமையாற்றியுள்ளார். இவர் ஒரு திறமைமிக்க விமானியாவர். ரஷ்யாவில் அன்ரனேவ் ரக விமானங்களை ஓட்டுவதில் பயிற்சி பெற்றவர் தனது கடந்தகாலத்தில் 7300 மணித்தியாலங்கள் விமானத்தை ஓட்டிய அனுபவம் உண்டு இளந்த அன்ரனேவ் விமானத்தையும் 200மணித்தியாலம் செலுத்தியுள்ளார்.

வடக்கு - கிழக்கில் யுத்த முனைகளில் பங்கு பற்றியவர் 'ஒப்பரேசன் லிபரேசன்' நடவடிக்கையில் இவர் முக்கிய பங்காற்றியவர். இதற்காக 'ரண விக்கிரம' என்ற பட்டத்தை தமதாக்கிக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. வடக்கில் 2 அவ்ரோ விமானங்கள் சுட்டு வீழ்த்திய பின்பு, முதன் முறையாக வடக்கு நோக்கி விமானத்தை செலுத்தி வந்தார்.

கொழும்பு சென்ற் தோமஸ் கல்லூரியில் பயின்ற இவர் 1981 ம் ஆண்டு விமானப் படையில் இணைந்தார். பாதி சிங்களவனாகவும் தமிழனாகவும் இருப்பதனால் பாக்கியநாதன் விடுதலைப்புலிகளோடு சம்பந்தப்பட்டவர் என்று தென் இலங்கையில் பொதுவாக பல வதந்திகள் அடிபட்டதைத் தொடர்ந்து அவரது தந்தையார் இப்படிக்கூறினார். எனது மகனுக்கு தமிழ் ஒருவார்த்தைகூடத் தெரியாது. அப்படியானவரை விடுதலைப்புலிகள் என்று கூறமுடியுமா? அவருடைய தாயார் ஒரு சிங்களப் பெண் என்பதைப் புரியாமல் இவர்கள் இருக்கிறார்கள்? என்கிறார்.

விமானியான ரஞ்சன் பாக்கியநாதன் பற்றி பல ஊகங்கள் தென் இலங்கையில் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இவர் இந்த விமானத்தை ஓட்டச்செல்வதற்கு சிறிது நேரத்துக்கு முன்பு ஒரு கேளிக்கை நிகழ்ச்சியில் பங்கு பற்றியிருந்தாராம் என்றும் கூறப்படுகிறது. விமானம் கடலில் நொருங்கி வீழ்ந்ததற்கு பல பல காரணங்கள் கூறப்படுகின்றன. இதன் உண்மை நிலைமை வெளிப்படுத்துமா? அல்லது மறைக்கப்படுமா? என்பது போகப் போகத்தான் புரியும். ம

## நவராத்திரி தின பேச்சுப் போட்டி

(கொழும்புத்துறை)

இணுவில் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபை நவராத்திரி தினத்தை முன்னிட்டு பேச்சுப் போட்டியை நடாத்தி வருகின்றது. இப்போட்டியில் பாடசாலை மாணவர்களைப் பங்குபற்றுவதற்கு தயார் செய்து அனுப்புமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

போட்டிகள் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக நடைபெறும்.

ஒக்டோபர் 1-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபை சைவப் பணிமனையில் இப்போட்டிகள் இடம்பெறும்.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் இடம்பெறுபவர்களுக்கே விஜய தசமி தினத்தன்று தங்கப் பதக்கம் பரிசில்களாக வழங்கப்படும்.

பங்குபற்றும் மாணவர்கள் தமது விண்ணப்பங்களை பத்து ரூபா கட்டணத்துடன் எதிர் வரும் 29ம் திகதி வெள்ளிக் கிழமைக்கு முன் செயலாளர், சைவப்பணிமனை, இணுவில் கந்தசுவாமி கோவில் இளந் தொண்டர் சபை என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு சபையின் தலைவர் திரு. ந. கிருபாகரன் தெரிவித்துள்ளார். .154

## ஊழியர்கள் விபரம் கோரல்

(திருநெல்வேலி)

வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் கடமை புரியும் ஊழியரின் விபரங்களை வட-கிழக்கு மாகாண சபை கோரியுள்ளது.

மேற்படி விபரங்களுக்கான விண்ணப்படிவங்கள் சகலருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது இப்படிவங்கள் கிடைத்தவுடன் வெற்றிடமாக உள்ள இடங்களுக்கு போட்டிப் பரீட்சை மூலம் நியமனம் வழங்கப்படும் எனவும் மாகாணசபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். 157-ரி

## உபகரணமாக்கல் பயிற்சிக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

பளை, பண்டிதர்குடியிருப்பு முன்பள்ளி ஆசிரியர்களின் உபகரணமாக்கல் பயிற்சிநெறி அண்மையில் பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவன மண்டபத்தில் இடம் பெற்றது.

இதைத் தொடர்ந்து ஆசிரியர்களின் உபகரணம் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டன அதிபர், பளைப் பிரதேசச் செயலக ஊழியர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். ரி

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995—09—21**

வியாழன் இரவு

8-02 தியாகி லெப். கேணல் திலீபனின் 8-ம் ஆண்டு நினைவாக சிறப்புநிகழ்ச்சி க. சிவராசா எழுதிய - மக்களை நேசித்தாய் மலைபோல் உயர்ந்தாய்
8 20 உழைப்போம் உயர்வோம் — நிகழ்ச்சியில் "கால்நடை தீவன" உற்பத்தி — உரைச்சித்திரம்
8-30 செய்திகள்
8 40 மொழியும் வாழ்வும்(27)
8-50 எங்களின் தேசம் (33)

**1995—09—22**

வெள்ளி காலை

7-02 மாவீர வணக்கம்
7-15 மணியாரம்
7-30 செய்திகள்
7-35 பத்திரிகைச் செய்திகள் அதனைத் தொடர்ந்து
8-00 மணி வரை தாயகப் பாடல்கள்

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995-09—21**

வியாழன் மாலை

5-01 சிந்தனைச் சிதறல்
5-02 எழுச்சிக் கீதம்
5-10 புதிரைவை
5-15 தியாக தீபம்
5-30 இசையும் கதையும்
6-00 சிந்தனைக்குச் சில வினாடிகள்
6-02 பொன் விளையும் பூமி
6-10 செய்திகள்
6-15 விளையாட்டுச் செய்திகள்
6-20 கேள்வி பதில்

## யுனிசெவ் நிறுவனம் மருந்துகள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றத்திற்கு மருந்துகளை அன்பளிப்பாக வழங்குவதற்கு யுனிசெவ் நிறுவனம் முன்வந்துள்ளது.

யாழ்ப்பாணம் வந்த யுனிசெவ் நிறுவனத்தின் அதிகாரி யாழ். மாநகராட்சி மன்ற ஆணையாளருடன் நடத்திய கலந்துரையாடலில் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

இதனைவிட மாநகராட்சி மன்றத்தின் 300 மலசல கூடங்களை அமைப்பதற்கான திட்டத்திற்கும் யுனிசெவ் நிறுவனம் நிதி உதவிகளை வழங்கவுள்ளது. 170:ரி

## யாழ். மாநகராட்சி மன்ற சுகாதாரப் பகுதி நடத்தும் சத்துணவுத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யூனிசேவ் ஸ்தாபனத்தின் நிதி உதவியுடன் யாழ். மாநகராட்சிமன்ற சுகாதாரப் பகுதி நடத்தும் சத்துணவு செயல் முறைத் திட்டம் யாழ். நகரில் நடைபெறுகின்றன.

பாடசாலை பிள்ளைகள் மற்றும் தாய்மார்களுக்கான இத் திட்டம் யாழ். நகரில் 21ம் திகதி வியாழக் கிழமை பிற்பகல்3-00மணிக்கு புனித சாவீஸ் ஆரம்ப பாடசாலையிலும், நாளை மறுதினம் 23ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு துரையப்பா வித்தியாலயத்திலும் நடைபெறும். 162-ரி

உழைப்பாலே உயர்வதுதான் வாழ்வு
ஊக்கமில்லா மனிதர் நிலை தாழ்வு.

# மனோபலமும் விடுதலை உணர்வுமே புலிகளின் மிகப் பெரும் ஆயுதம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் நடாத்தும் போரில் அவர்களின் மிகப் பெரிய ஆயுத பலம் எதுவெனில் அவர்களது தீவிர உணர்ச்சியும் தியாக மரணம் என்னும் வழிபாட்டு மரபும் சேர்ந்து மிகப்பெரிய படைக்கலனாகவே ஆகிவிட்டதாக பி. பி. சி தெரிவித்தது.

பி. பி. சி தனது ஆய்வுரைக் கண்ணோட்டத்தில் மேலும் தெரிவிக்கையில் இவ்விரண்டையும் விடுதலைப் புலிகளின் தலைமை திட்டமிட்டே பேணிவருகிறது.

ஒவ்வொரு போராளியிடமும் ஒரு சயனைட்குப்பி கொடுக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிப் போராளிகள் கைதியாக பிடிக்கப்படும் பட்சத்தில் அதனை விழுங்கிவிடுமாறு ஆண் பெண் போராளிகளுக்கு விடுதலைப் புலிகளின் தலைமை உத்தரவு வழங்கியுள்ளது.

விடுதலைப் புலிகளின் உயர் தனிதற்கொலைப் படையான கரும்புலிகள் படையில் சேர்வதற்கு போராளிகள் முயன்று கொண்டிருப்பது தம்முடைய கொள்கையில் போராளிகள் கொண்டுள்ள அர்ப்பணிப்பை காட்டுகிறது எனலாம்.

இவையெல்லாம் அவர்களின் தனிப் பெரும் ஆயுதங்களாகவே கருதப்பட வேண்டியவை எனவும் குறிப்பிட்டது. க-சி

# விமானங்கள், ஹெலிகள், கப்பல்கள் இன்னமும் வந்து சேரவில்லையாம்

[கொழும்பு]

விடுதலைப் புலிகளுக்கு எதிரான பாரிய தாக்குதலை தொடுக்கத் தேவையான பெருமளவு இராணுவ தளபாடங்களும், விமானங்களும், ஆயுதங்களும் இன்னமும் கொழும்பு வந்து சேரவில்லையென படை வட்டாரங்கள் தெரிவிப்பதாக பி. பி. ஸி தெரிவித்தது.

வடக்கில் மாரிகாலம் ஆரம்பிப்பதற்கு முன் யாழ் குடாவில் பாரிய தாக்குதலைத் தொடுப்பதற்காக படையினர் விமானங்கள், ஹெலிகொப்டர்கள், கடற்படைக் கப்பல்கள் பலவற்றை கொள்வனவு செய்தும் அவற்றில் பலஇன்னமும் வந்துசேரவில்லை.

இதனால் படையினரின் யாழ் குடா தாக்குதல் ஒத்திவைக்கப்பட்டு வருகிறது. யாழ் குடாவில் பெருமளவு படையினர் கிழக்கிலிருந்து கொண்டுவந்து குவிக்கப்பட்டபோதும் மேற்படி ஆயுதங்களும் இராணுவ தளபாடங்களும் கொழும்பு வந்து சேராததால் படையினர் பெரும் நெருக்கடியை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாம்.

கிழக்கில் புலிகளின் கை ஓங்கி வருவதே இதற்கு காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. சி

# அன்ரனோவை ஆழ்கடலில் தேடி சிங்கப்பூர் குழுவின் விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

'அன்ரனோவ்' விமான விபத்து குறித்து புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி இன்றுமுதல் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சிங்கப்பூர் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் 'மாஸ்டர் டைவேர்ஸ்' நிறுவனத்தின் அழைப்பையேற்று சிங்கப்பூர் குழுவினர் இங்கு வந்துள்ளனர். இக்குழுவில் இரு சுழியோடிகளும், கப்பல்துறைப் பொறியியலாளர்கள் இருவரும் உள்ளனர்.

பத்தாயிரம் மீற்றர் ஆழத்தில் ஆய்வு நடாத்தக்கூடிய 'சோனர்' சாதனம் அடங்கலாக நவீன சாதனங்களைக் கொண்டுவந்துள்ளதாகவும் விமானம் வீழ்ந்த இடத்திலிருந்து விசாரணைகளை நடாத்தப் போவதாகவும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக இலங்கை கடற்படை, விமானப்படையின் உதவி பெற்றுக்கொள்வது பற்றி பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தையுடன் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டுள்ளதாக கம்பனியின் முகாமையாளரான திலக விக்கிரமநாயக்கா தெரிவித்தார். க சி

# மண்டைதீவிலிருந்து சூடு மீனவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சிறுத்தீவு கடற்பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மீனவர்களை நோக்கி மண்டைதீவு இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் இரவு துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

இந்த துப்பாக்கிச்சூட்டிற்கு இலக்காகி குருநகரை சேர்ந்த எ. எல்விஸ் (வயது 36) என்ற மீனவர் படுகாயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவருடன் மீன்பிடிக்கச் சென்ற இரண்டு மீனவர்கள் எதுவித காயமுமின்றி தப்பித்தனர். 170 95 சி

# கல்குடா கடலில் 5 படகுகள் கடத்தல்

(கல்குடா)

கல்குடா பகுதியிலிருந்து ஐந்து மீன்பிடி படகுகள் நேற்று முன்தினம் துப்பாக்கி முனையில் கடத்திச்செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கல்குடா பகுதியில் இரண்டு அதிவேகப் படகுகளில் வந்தவர்களே இப் படகுகளையும் அதிலிருந்த மீனவர்களையும் கடத்திச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக பொலிசார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். ரி-சி

# ஆசிரியர் சம்பளம் இன்று வழங்கப்படும்

(குருநகர்)

யாழ். மாவட்ட ஆசிரியர்களின் இம்மாதச் சம்பளம் இன்று வழங்கப்படும். இச்சம்பளத்தை வழங்குவதற்குரிய கட்டுநிதி நேற்றைய தினம் யாழ். கல்வித் திணைக்களத்துக்கு கிடைத்துள்ளது.

இம்மாதச் சம்பளத்துடன் இலங்கை ஆசிரியர் சேவையில் உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான பங்குனி 95க்குரிய நிலுவையும் வழங்கப்படவுள்ளதாக யாழ். கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது. 95-சி

# பேராதனை பல்கலைக்கழக 5 மாணவர் கடத்தப்பட்டனர்

[கொழும்பு]

பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் ஐவர் இனந்தெரியாத கோஷ்டி ஒன்றினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக்கழக பகுதியில் மாணவர்களுக்கு எதிரான போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருப்பதாகவும் அந்தப் போஸ்டர்களில் மாணவர்களுக்கு பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளதென்றும் பல்கலைக்கழக மாணவர் சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

போஸ்டர்களை ஒட்டிய கோஷ்டியினராலேயே ஐந்து மாணவர்களும் கடத்தப்பட்டுள்ளனர் என்றும் வெலித்தாஸ் சிங்கள சேவை தெரிவித்துள்ளது. ம-சி

பாடசாலைகளில்

# ஞாயிற்றுக் கிழமைகளில் பயிற்சி வகுப்புகளுக்கு தடை

[கொழும்பு]

பாடசாலைகளில் ஞாயிற்றுக் கிழமைகளில் நடாத்தப்படும் அனைத்து பயிற்சி வகுப்புகளுக்கும் அரசு தடை விதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஞாயிற்றுக் கிழமைகளில் சிங்கள மாணவர்கள் சமயம் தொடர்பான வைபவங்களில் கலந்து கொள்வதற்கு வசதியாகவே அரசு இந்த தடையை விதித்துள்ளது.

பௌத்த அமைப்புக்களின் கோரிக்கையை அடுத்து ஜனாதிபதி சந்திரிகா உடனடியாக இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. சி

### பலாலியிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வும் பின்னடைவும் ஏற்பட்டதையடுத்தே பலாலியிலிருந்த படையினரின் எண்ணிக்கை பத்தாயிரத்தால் குறைக்கப்பட்டுள்ளது.

இதனால் யாழ் குடா மீது படையினர் மாரிகாலத்திற்கு முன் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த இராணுவ நடவடிக்கைமேலும்ஒத்திப் போடப்படலாமென்றும் இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். சி

### இரகசியங்களை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளதை அடுத்தே சந்திரிகா இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அமைச்சரவை இரகசியங்கள் இவ்வாறு அம்பலமாவதால் பொ. ஐ. மு. அரசை கடுமையாக விமர்சிக்க எதிர்க்கட்சியினருக்கு வாய்ப்பு உண்டாவதாக நேற்றைய பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

அண்மையில் 'ஐலண்ட்' பத்திரிகை இப்படியான இரகசிய செய்தி ஒன்றை பெற்று பத்திரிகையில் பிரசுரித்துள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் அமைச்சரவையின் இரகசியங்களை பாதுகாக்கும்படி ஜனாதிபதி சந்திரிகா அமைச்சரவையை எச்சரித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. சி-ம

### புலிகளின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளரெனவும் வழக்கு நடக்கும் இடத்திற்கு முதல்வர் ஜெயலலிதா வந்தால் குண்டு வெடிக்குமெனவும் எச்சரிக்கை விடுத்தாராம்.

இதையடுத்து நீதிமன்றின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதுடன் அங்கு தேடுதலும் நடாத்தப்பட்டது. தற்போது முதலவரின் பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சி

### ஷெல் தாக்குதலை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

பலாலிஇராணுவ முகாம் உட்பட பல இராணுவ முகாம்களில் இருந்து மக்கள் குடியிருப்புக்களை நோக்கி கண்மூடித்தனமாக மேற்கொள்ளப்பட்டு வரும் ஷெல் வீச்சுக்கள் இருபதிற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டும் அறுபத்தி மூன்று பொது மக்கள் படுகாயமடைந்துள்ளார்கள்.

இந்த ஷெல் தாக்குதலை வன்மையாகக் கண்டித்துள்ள அரச அதிபர் இதனை உடனடியாக நிறுத்துமாறும் ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோரை கேட்டுள்ளார். 162சி

### பாரிய படைமுகாம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதலின் போது:

★ 82 மில்லிமீற்றர் மோட்டர் -01
★ அதற்குரிய ஸ்கோப் -01
★ வைபோட் -01
★ பேஸ் பிளேட் -01
★ எய்ம் போஸ்ட் -03
★ ஷெல்கள் -20
★ ஆர். பி. ஜி -01
★ புரொப்ளர்கள் -02
★ எறிகணைகள் -03
★ ரி-81 எல். எம். ஜி. -02
★ அதற்குரிய ரம் மகசீன் -08
★ ஏ. கே. துப்பாக்கிகள் -06
★ அதற்குரிய மகசீன் -34
★ ஏ. கே. எல். எம். ஜி ரம் மகசீன் -02
★ ஏ. கே. எல். எம் ஜி. லிங்குடன் ரவைகள் -100
★ 60 மில்லி மீற்றர்
★ மோட்டர் ஸ்கோப் -01
★ அதற்குரிய ஷெல்கள் -10
★ கைக்குண்டு -06
★ பைனகுலர் -01
★ குண்டு துளைக்காத அங்கிகள் -05
★ நடுத்தர ரவைகள் -3565
★ நேட்டோ ரவைகள் -17
★ ஜி 3 மகசீன் 02

என்பன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இம்மோதலில் புலிகள் தரப்பில் மேஜர் வசிராஜன் (கந்தசாமி நல்லநாதன் - மட்டக்களப்பு), மேஜர் நவிந்தன் (தங்கவேல் சந்திரன்- மட்டக்களப்பு), வீரவேங்கை பாண்டியன் (ஆறுமுகம் ஆனந்தராசா-மட்டக்களப்பு) ஆகிய போராளிகள் வீரச்சாவடைந்தனர். க-ரி-சி

### குடாநாடு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டார்கள்.

யாழ் குடா நாட்டிலுள்ள அரச திணைக்களங்கள், வங்கிகள் போன்றவற்றில் தியாகி திலீபனின் திருஉருவப்படம் வைக்கப்பட்டு ஈகைச்சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டு வருகிறது. யாழ் நகரில் சகல பகுதிகளிலும் சகல சில்லறைக் கடைகளிலும் தியாகி திலீபனின் திருஉருவப்படம் வைத்து அஞ்சலி செலுத்தி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

நல்லூரில் நேற்று பல்வேறு பொது அமைப்புக்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் தொண்டர்கள் பெருமளவில் அடையாள உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டார்கள். பல்வேறு பாடசாலை மாணவ, மாணவிகளும் நேற்றைய உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டார்கள் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இசை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

தியாகி லெப். கேணல் திலீபன் பற்றிய வரலாற்று வீடியோ படமும் காண்பிக்கப்பட்டது. 162-170 சி

### விசேட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் பொலிஸ் கான்ஸ்டபிள்ஒருவரை சுட்டுக்கொன்றதாகவும் நேற்று முன்தினம் காலை 9மணிக்கு இச்சம்பவம் நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ரி சி

### ஐ.நா. அதிகாரிகள் திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வந்த ஐக்கிய நாட்டு அதிகாரிகள் நேற்று 'ஹபரண' கப்பல் மூலம் கொழும்பு நோக்கி புறப்பட்டு சென்றார்கள்.

ஐக்கிய நாட்டு அதிகாரிகள் யாழ். நகரில் தங்கியிருந்த இருநாட்களிலும் அரச அதிகாரிகளையும், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து குடாநாட்டு நிலைமை தொடர்பாக கலந்துரையாடல்களை நடத்தியுள்ளனர்.

இதைவிட இடம் பெயர்ந்தோர் முகாம்கள் மற்றும் பாதிக்கப்பட்ட இடங்களையும் நேரில் சென்று பார்த்தனர். 170-162-சி

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683618.